பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 11 (26—12—67) செவ்வாய் ★ வெளியூர்: மார்கழி 12 (27—12—67) புதன் [இதழ்: 161

# அந்தமான் தீவுகளும் இந்தி பகுதிகளாகின்றன!

## மொழித் திணிப்பு அலுவலில் மத்திய அரசு தீவிரம்!

## 'நாமெல்லாம் புதுடில்லிவாசிகள்' --- பள்ளிச் சிறுர்களின் பால பாடம் இதுதான்!

**வங்காள விரிகுடாவில் 400 மைல் பரப்பில் பரந்து கிடக்கும் அந்தமான் தீவுக்கூட்டங்களிலும் மத்திய அரசு, இந்தியைத் திணிப்பதில் தீவிரம் காட்டி வருவதுபற்றி, 'இந்து' நாளிதழின் அந்தமான் செய்தியாளர் தந்துள்ள விவரமாவது —**

"மத்திய ஆட்சிப் பகுதியான இங்கு, இதுவரையில் மொழிப் பிரச்சினை வந்தது கிடையாது; ஆனால், மத்திய ஆட்சியின் கல்வித் துறை வெளியிட்டுள்ள ஒரு சுற்றறிக்கை இப்போது அந்தப் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

இந்தப் பகுதியை, ஓர் 'இந்திப் பிரதேசமாக' மாற்றும் மத்திய ஆட்சியின் போக்குக்கு இப்போது சரியான எதிர்ப்புத் தோன்றியிருக்கிறது!

அந்தமான் தீவுகளில் உள்ள பெரும் பகுதி மக்கள், அரசினர் ஊழியர்கள்; எனவே, அரசின் திட்டங்களை எதிர்ப்பது என்பது கடினமான காரியம்தான்!

ஆனாலும், ஆங்கில மொழியிலிருந்து பாட மொழியாக இந்தியைத் திணிக்க வழிவகுக்கும் புதுடில்லியின் சுற்றறிக்கை, இங்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது!

பெற்றோர்கள்—ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில்,

"மொழிப் பிரச்சினையின் அரசியல் உண்மைகள் பற்றி எங்களுக்கு ஏதும் தெரியாது; எங்களுக்கு எங்கள் குழந்தைகளின் கல்விதான் முக்கியம்; பாட மொழியாக இந்தி வருவதை நாங்கள் விரும்பவில்லை"

என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது!

**இங்குள்ள மத்திய பள்ளியில் படிக்கும் 294 மாணவர்களில் 276 பேர், இந்தி பேசாத குடும்பத்துப் பிள்ளைகள்!**

அதுமட்டுமல்ல: அந்தமான் தீவுக் கூட்டங்களில் இந்தி பேசுபவரைவிட இந்தி பேசாத மக்கள்தான் பெரும் பகுதியினர் என்பதை பின்வரும் புள்ளிவிவரம் விளக்கும்.

1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி, அங்கே உள்ள ஒவ்வொரு தாய் மொழிக்காரர்களுடைய சதவிகிதம் வருமாறு:—

| | |
|---|---|
| ஆங்கிலம் | 0.12 |
| இந்தி | 5 62 |
| இந்துஸ்தானி | 7.04 |
| தமிழ் | 9.07 |
| தெலுங்கு | 5.91 |
| வங்காளம் | 21.80 |
| பஞ்சாபி | 0 56 |
| மலையாளம் | 10.43 |
| நிக்கோபார் | 21.92 |
| உருது | 2.09 |
| மற்றையோர் | 11.84 |

நிலைமை இப்படி இருந்தாலும், அந்தமான் தீவுகளில். இந்தியைத்தான் பாட மொழியாக மத்திய அரசு ஆக்கியிருக்கிறது!

ஆசிரியர் பயிற்சிகூட இந்தி மொழியின் மூலம்தான் தரப்படுகிறது.

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கான புத்தகம் ஒன்றில் முதல் பாடமே, "நாம் அனைவரும் புதுடில்லிவாசிகள்" என்பதுதான்!

பிற மொழிகளில் உள்ள பாட நூல்கள்கூட, இந்தி மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவைகளாகத்தான் இருக்கின்றன!

குடிசைத் தொழிலில் பயிற்சி பெற்ற ஒருவரை, கல்வி இலாகா அதிகாரியாக நியமித்திருக்கும் புதுடில்லியின் போக்குதான் இதற்குக் காரணம்!

அங்கே உள்ள கல்வி இலாகாவின் செயலாளர்கூட, வேறு ஒரு துறையில் புலமை பெற்றவர்தான்!

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்தத் தீவுக்காக மத்திய அரசு ரூ. 57.757 இலட்சம் செலவழித்தும், கல்வியின் தரம் குழப்பத்திலும் பின்தங்கிய நிலையிலுமதான் இருக்கிறது!**

# புதுமுகம்-- அறிமுகம்!

சென்ற வாரம் செவ்வாய்க்கிழமையன்று முன்னாள் மத்திய அமைச்சர் எஸ். கே. பாட்டில் புதுடில்லியில் விருந்தொன்று நடத்தினர்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்பட பல அரசியல் தந்திரிகள்—அமைச்சர்கள்—தலைவர்கள் முதலானோர் அந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்!

விருந்து நடத்தப்பட்டதன் காரணம், புதிய காங்கிரசுத் தலைவரை வரவேற்கவும் அறிமுகப்படுத்தவும்!

# காவலர்கள் கள்வர்களானுர்கள்!

## தமிழக வியாபாரியிடம் கேரளப் போலீசார் கைவரிசை

அய்யன்பெருமாள் என்னும் விருதுநகர் வியாபாரியிடம், திருவனந்தபுரத்து எல்லையில் பணம் களவாடிய குற்றத்துக்காக ஆயுதப் போலீசுப் பிரிவினைச் சேர்ந்த இரு காரோட்டிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

போலீசு லாரியில் வந்த இவர், தனது ஐயாயிரம் ரூபாய் பணத்தையும் களவாடிக் கொண்டதாக அந்த வியாபாரி கொடுத்திருந்த புகாரை அடுத்து இந்தக் கைது நடைபெற்றிருக்கிறது!

# வடக்கு - தெற்கு மட்டும்தானு?

## கிழக்கு --- மேற்கு இல்லையா?

பெங்களூர் நகரப் பல்கலைக் கழக மாணவர் கழகத்தில் பேசிய மத்திய கல்வி அமைச்சர் திரிகுண சென், அரசியல் திசையில், கிழக்கும் மேற்கும் பேசப்படாதது குறித்து உரிமையுடன் 'கோபித்து'க் கொண்டிருக்கிறார்!

"'வடக்கு' என்றும், 'தெற்கு' என்றும்தான் பேசுகிறார்களே தவிர, கிழக்கு-மேற்கு என இரண்டு திசைகள் இருப்பதனை யாரும் கவனிப்பதே கிடையாது; கிழக்கே உள்ள வங்காளியர்களெல்லாம் இருப்பதாகவே சிலர் நினைப்பதில்லை போலிருக்கிறது" என்று பேசியிருக்கும் அவர், 'இப்படியெல்லாம் திசைகளின் அடிப்படையில் பேசுதல் கூடாது; 'இந்தியா ஒன்று என நினைக்கவேண்டும்' என மாணவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்!

# ஆப்பிள் மரத்தடியில் அமெரிக்க டாலர் புதையல்!

காற்றில் விழுந்த ஆப்பிள் மரத்தை அப்புறப்படுத்திக் கொண்டிருந்த லிதுவானியா (மாஸ்கோ) பள்ளிச் சிறுவர்களுக்கு, அந்த இடத்தில், ஒரு ஜாடி நிறைய தங்க நாணயங்கள் இருந்த புதையல் கிடைத்திருக்கிறது!

அதில், 1824-ம் ஆண்டினைச் சேர்ந்த அமெரிக்க டாலர் நாணயங்களும் இருந்திருக்கின்றன.

தமிழகத்தைத் தொடர்ந்து......

# ஆந்திர--கன்னட மாணவர் உலகம் ஆர்த்தெழுகிறது!

## 'எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி' என முழங்கி எதிர்ப்பு அணி வகுக்கின்றனர்!

**மத்திய அரசின் ஆட்சிமொழிக் கொள்கையினை எதிர்த்து ஆந்திர—கன்னட மாநில மாணவர் உலகம், போராட்டத் திட்டங்கள் வகுத்திருக்கிறது!**

வருகிற சனவரி முதல் வாரத்தில், ஐதராபாத்தில் நடைபெறவிருக்கும் அனைத்திந்தியக் காங்கிரசு மாநாட்டின்போது, பெரிய அளவில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்துவதென ஆந்திரா—உஸ்மானியா—வெங்கடேசுவரா பல்கலைக் கழக மாணவர்கள் உறுதியெடுத்திருக்கின்றனர்!

இத்துடன், மாநிலத்தின் உட்பகுதிகள் அனைத்திலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினைத் தீவிரப்படுத்துவதெனவும் முடிவு செய்திருக்கின்றனர்!

இதேபோல், கருநாடக மாநில மாணவர் பிரதிநிதிகள், பெங்களூரில், மத்தியக் கல்வி அமைச்சர் திரிகுண சென்னிடம் இந்தி மொழிக் கொள்கையினை எதிர்த்துக் கண்டனக் குறிப்பு ஒன்றை—மாநிலத்தின் 40,000 மாணவர்கள் சார்பில்—தந்திருக்கின்றனர்!

மறைமுக வழிகளில் மத்திய அரசு, இந்தி பேசாதவர்கள்மீது இந்தியைத் திணிக்கும் போக்குக்கு எச்சரிக்கையுடன், 'இதுவே நீடித்தால் நாட்டின் ஒற்றுமைக்குப் பிளவு ஏற்படுத்தும்' எனவும், 'இந்தியா, இந்தி பேசும் பகுதி—பேசாத பகுதி என இரு கூறுகளாகும்' எனக் கவலை தெரிவித்தும், அந்தக் குறிப்பில் மாணவர்கள் உணர்த்தியிருக்கின்றனர்!

# காதில் விழுந்தது!

"காமராசரைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்களே?"

"என்னப்பா புதிர் போடுகிறாய்?"

"தவருக ஒன்றும் சொல்லவில்லை; அடுத்தாற்போல் அவர் என்ன செய்யப் போகிறார் என்பது பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக யூகம் தெரிவிக்கிறார்கள்—அதைத்தான் சொன்னேன்!"

"ஓ, அதுவா? நான் முதலில் உன் கேள்வியைக் கேட்டதும் என்னென்னவோ நினைத்துவிட்டேன். அது போகட்டும்; ஏன், கொஞ்ச நாள் அவர் சும்மாதான் இருக்கட்டுமே! 'அதை விட்டால் இது; இதை விட்டால் எது' என்று ஏதாவது ஒன்றில் இருந்துகொண்டேதான் இருக்கவேண்டுமா, என்ன?"

"ஏதாவது ஓர் இடைத் தேர்தலுக்கு நிற்பார்—என்று சமீபத்தில்கூட ஓர் ஆங்கிலப் பத்திரிகை எழுதியிருந்ததே!"

"கட்சியின் தலைமைப் பதவியைவிட்டு இறங்க இருப்பவருக்கு, ஏன் அதற்குள் இத்தனைச் சிறிய பதவியில் நாட்டம்! 'முன்னாள் காங்கிரசுத் தலைவர்' என்ற பட்டத்தைப் பயன்படுத்தாமலே அதற்குள் ஏன் இன்னொரு பதவி?"

"சும்மா எப்படி இருப்பது? அதுவும் எப்படி எப்படியோ இருந்துவிட்டு?"

"சும்மா இருப்பது என்பதை எப்படிப் பொருள் கொள்கிறாய், நீ? உலகில் எதுவும்—எவரும் சும்மா இருப்பது என்பதே இல்லை. நிலையாக இருக்கும் மலைகூட, எத்தனையோ ஆண்டுக்கொரு முறை வளருவதாகக் கூறுகிறார்கள்!"

"ஆடி ஓடி அலுவல் பார்ப்பது என்ற பொருளில் நான் கூறவில்லை; 'பதவி' ஏதும் இல்லாமல் காமராசர் எப்படிச் சும்மா இருப்பார் என்றுதான் கூறினேன்!"

"ஓகோ! பதவி — தகுதி இரண்டும் இல்லாவிட்டால், காமராசரும் ஒரு 'சும்மா' தானு? 'இந்தியாவின் தலையெழுத்தையே நிர்ணயித்துக் கொண்டிருப்பவர்; சோஷலிசத்தின் காவலர்' என்றெல்லாம் கூறினார்களே?"

"அதெல்லாம் காங்கிரசுத் தலைவராக இருந்தபோது! இனி, சாதாரண குமாரசாமி காமராசர்தானே!"

"இனி எவர், இந்தியாவின் தலையெழுத்தை நிர்ணயிப்பார்கள்? சோஷலிசத்தைக் கட்டிக் காப்பார்கள்?"

"இப்படியெல்லாம் சொன்னவர்களைத்தான் கேட்க வேண்டும்!"

"அப்படிச் சொன்னவர்களும், சனவரிக்குப் பிறகு அவர் பின்னால் சுற்றமாட்டார்கள்; ஏனென்றால், அவர் இப்போது 'சும்மா காமராசர்'தானே!"

"இப்போதைய தமிழக முதலமைச்சரைப் பற்றிக் கொஞ்சநாட்களுக்கு முன்பு 'மெயில்' பத்திரிகை எழுதியிருந்த தலையங்கம்தான் நினைவுக்கு வருகிறது; **'பதவியினால் பெருமை பெறும் மனிதர் இருக்கிறார்கள்; மனிதரினால் பெருமை பெறும் பதவிகள் இருக்கின்றன; அண்ணாதுரை முதலமைச்சராகியிருப்பது, பதவிக்குப் பெருமை' என்று எழுதியிருந்தது அந்தப் பத்திரிகை!**"

"அப்படியென்றால், 'காமராசர் இதுவரையில் பெருமை பெற்றது பதவிகளினால்தான்' என்பது உனது எண்ணம் இல்லையா?"

"அப்படியொன்றும் நான் இப்போதே சொல்லிவிடத் தயாராயில்லை; 'பதவியேதும்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 11 (26—12—67) செவ்வாய்

# மும்மொழிக் கொள்கை--ஓர் அரசியல் மோசடி

"மும்மொழிக் கொள்கையை அனைத்து மாநில அரசுகளும் செயல்படுத்த வேண்டும்" என்ற கோரிக்கையை, தலைமை அமைச்சர் இந்திரா காந்தியார் விடுத்திருக்கிறார்கள். பல்வேறு மொழியினரிடையும், குறிப்பாக 'இந்தி மொழியினர்—இந்தி பேசாதோர் ஆகிய இரு சாராரிடையிலும் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை உருவாக்க வேண்டும்' என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த மும்மொழித் திட்டம் தீட்டப்பட்டது.

இந்த மும்மொழித் திட்டத்தின்படி இந்தி மொழியினர், இந்தி-ஆங்கிலம்-தென்னக மொழிகளில் ஏதாவது ஒரு மொழி—ஆக மூன்று மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்; இந்தி பேசாத பகுதியினர், ஆங்கிலம்-இந்தி-தாய்மொழி—ஆக மூன்று மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்; இதுதான் மும்மொழித் திட்டம் என்பதாகும்.

இந்த மும்மொழித் திட்டத்தை, ஏற்கனவே தமிழகத்திலிருந்த காங்கிரசு ஆட்சி ஏற்றுக்கொண்டது; இந்தி பேசும் மாநிலங்களும் இத்திட்டத்தை ஒப்புக்கொண்டன.

ஆனால் இந்தி மாநிலங்கள், இந்த மும்மொழித் திட்டத்தின்படி தென்னக மொழிகளில் ஏதாவது ஒரு மொழியைத் தங்கள் பள்ளிகளின் வாயிலாகக் கற்றுத்தர முனைந்ததா என்றால், அதுதான் இல்லை. திட்டத்தை ஒப்புக்கொண்டபொழுதே, 'அதைச் செயல்படுத்துவதில்லை' என்ற முடிவினையும் மேற்கொண்டுவிட்டன இந்தி மாநிலங்கள்!

இக்கேள்விக்குக் கிடைத்திடக்கூடிய விடை ஒன்றே ஒன்றுதான்; மும்மொழித் திட்டத்தை இதுவரையில் செயல்படுத்தத் துணியாத இந்தி மாநிலங்கள், 'இனிச் செயல்படுத்த முனையும்' எனக் கொள்ள முடியாது; இப்படித் தீர்மானிப்பதற்கு இனி இடமில்லை.

மும்மொழித் திட்டத்தை இந்தி மாநிலங்கள் இதுவரைச் செயல்படுத்தவில்லை என்றாலும், இனியாவது செயல்படுத்தத் துணியுமா? தலைமை அமைச்சரின் வேண்டுகோளை இந்தி மாநிலங்கள் மதித்துச் செயல்படுமா?

மும்மொழி ஏற்பாட்டைப் பெயரளவுக்காவது இந்தி மாநிலங்கள் இதுவரை ஒப்புக்கொண்டிருந்தன; இனி அத்திட்டத்தை வெளிப்படையாக இந்தி மாநிலங்கள் எதிர்த்தாலும் எதிர்க்கக் கூடும். அப்படி எதிர்க்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'மும்மொழித் திட்டத்தைப் பெயரளவுக்குக்கூட, இந்தி மாநிலங்கள் இனி ஏற்றுக்கொள்ளப்போவதில்லை' என்பதுடன், 'எதிர்த்திடவும் கூடும்' என்பது வெறும் கற்பனையல்ல!

ஆட்சி மொழித் திருத்த மசோதாவும், அதையொட்டிய தீர்மானமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டதற்குப் பின்னர், ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை இந்தி மாநிலங்களுக்கு அறவே இல்லாமல் போய்விட்டிருக்கிறது. ஆங்கில மொழியையே கற்றுக்கொள்ள வேண்டிய தேவை இல்லாதபொழுது, காதொடிந்த ஊசியளவு பயனும் தர முடியாத தென்னக மொழிகளில் ஏதாவது ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை, இந்தி மாநிலங்களுக்கு ஏது?

'இந்தி மொழி ஒன்றில் மட்டுமே தேர்ச்சி பெற்றிருந்தாலே, இந்திய அரசாங்கத்தில் உயர்ந்த பதவியைப் பெற முடியும்' எனச் சட்டமியற்றிவிட்டதற்குப் பிறகும், தங்கள் தாய்மொழியான இந்தியை மட்டுமே கற்றுக்கொண்டு அரசாங்க உயர் பதவிகளைப் பெறத்தான் இந்திக்காரர்கள் விரும்புவார்களே அல்லாது, தேவையற்ற ஆங்கிலத்தையும், சிறிதளவு பயனும் அளிக்க முடியாத தென்னக மொழிகளில் ஒன்றையும் கற்றுக்கொள்ள, அவர்கள் என்ன பேதைகளா?

ஆங்கிலத்துக்கு எதிரான உணர்ச்சி, இந்திக்காரர்களிடம் உச்சம் பெற்றுவிட்டிருக்கிறது! 'ஆங்கிலத்தை விரட்டிவிட்டால், ஆட்சி மொழியாக மட்டுமே அல்லாது, அம்மொழி பயன்படுத்தப்பட்டுவந்த அனைத்துத் துறைகளிலும் இந்தியைத் திணித்துவிட முடியும்' என வெறிகொண்டிருக்கின்றனர், இந்திக்காரர்கள்!

இத்தகைய இந்தி மொழி வெறி கொண்டிருக்கின்றவர்களிடம், தென்னக மொழிகளில் ஒன்றைக் கற்றுக்கொள்ளக்கூடும் என எதிர்பார்ப்பது, பேதைமையிலும் பேதைமையாகும்.

'மும்மொழித் திட்டத்தின்கீழ் இந்திக்காரர்கள், தமிழையோ, தெலுங்கையோ, கன்னடத்தையோ கற்றுக்கொள்ளுவதால், அவர்கள் எந்தப் பயனை அடைந்திட முடியும்? ஒரு பயனும் தர முடியாத ஒரு மொழியைக் கற்றுக்கொள்ளச் சொல்லுவது நிறைவேற்றப்பட முடியாத வேண்டுகோள் ஆகும்.

தென்னக மொழிகளில் ஒன்றை இந்திக்காரர்கள் கற்றுக்கொண்டாலும் கற்றுக்கொள்ளாமல் போனாலும், அதனால் நேரடியாகவோ மறைமுகமாகவோ, இந்தி பேசாதோர் பெறக்கூடிய இலாபம் ஒன்றுமில்லை. இந்த உண்மை, அனைவருக்கும் தெளிவாகத் தெரியும்.

மும்மொழித் திட்டத்திலிருக்கின்ற இந்தக் குறைபாடு, தலைமை அமைச்சர் இந்திரா காந்திக்கும் தெளிவாகத் தெரியும்; தெரிந்துதான், 'மும்மொழித் திட்டத்தை நிறைவேற்றிவைக்க வேண்டும்' என்ற வேண்டுகோளை வெளியிட்டிருக்கின்றார். இதன் பலனாக மொழித் துறையில் பெருஞ்சுமையை ஏற்க வேண்டியவர்கள் இந்தி பேசாதோரே ஆவர். இவ்வுண்மையை, இந்தி பேசாதோர் கருத்திலிருந்து மறைப்பதற்குத்தான், 'மும்மொழித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என்ற வேண்டுகோளை இந்திரா காந்தியார் வெளியிட்டுள்ளார். எனவே, தலைமை அமைச்சரின் வேண்டுகோளை, ஒரு 'அரசியல் மோசடி' என்றுதான் தீர்மானிக்க வேண்டும்.

—கா. க.



# மாணவர்களுக்கு அறிஞர் அண்ணா கனிவுரை

"பங்குச் சண்டை--பதவிச் சண்டை மூட்டிவிட்டு, 'கழகம் உடைபடச் செய்யலாம்' என்று எண்ணினர்—இயலவில்லை!

"உணவுப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாமல் திணறிப் போய்விடுவோம்; அந்த நிலையில் நம்மைத் 'தீர்த்துக்கட்டி விடலாம்' என்று திட்டமிட்டனர்—இயலவில்லை!

"நிதி நிலைமையிலே நெருக்கடி மூண்டுவிடும்; அதனைக் காரணமாகக் காட்டி, 'விரட்டி விடலாம்' என்று கருதினர்—இயலவில்லை!

"படி அரிசித் திட்டத்தால், பெரிய நட்டத்துக்கு ஆளாகி, அதனாலேயே 'அழிந்துபடுவோம்' என்று எண்ணினர்—இயலவில்லை!

"ஆட்சி நடத்தத் திறனற்று--ஆகாத முறைகளை மேற்கொண்டு--ஊர் சிரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவோம்; அந்த நேரமாகப் பார்த்து, 'உருட்டி விடலாம்' என்று எண்ணினர்—இயலவில்லை!

"இருபது ஆண்டுகளாகக் காங்கிரசுப் பிடியிலே இருந்துவந்த அதிகார வர்க்கம் நம்மோடு ஒத்துழைக்காது--நிர்வாகம் நடத்துவதிலே தகராறுகள் கிளம்பும்; அதன் பயனாக, 'இந்த அரசு கவிழும்' என்று எண்ணினர்—இயலவில்லை!

"மத்திய அரசுக்குத் தூபமிட்டு--நமது அரசின் போக்குக்குக் குந்தகம் விளைவித்து, 'கெடுக்கலாம்' என்று கருதினர்—இயலவில்லை!

"இழிவான பிரசாரம் செய்து ஆத்திரமூட்டி--நமது மன அமைதியைக் குலைத்து--பரபரப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, 'பழி தேடிக் கொள்வோம்' என்று எதிர்பார்த்தனர்—நடைபெறவில்லை!

"இடைத் தேர்தல்களிலே எல்லா வலிவினையும் திரட்டிப் போரிட்டு, 'வீழ்த்தலாம்' என்று முயன்றனர்—இயலவில்லை!

இவ்வளவு முயற்சிகளும் முறிந்துபட்டன! காரணம், உமது பேராதரவு! மக்களின் நல்லெண்ணம்!

# கழக அரசைக் கவிழ்க்க முனையும் சக்திகளுக்கு இடமளிக்க முனையாதீர்!

## 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி எப்படி அமைய வேண்டும்' எனத் தீர்மானிக்கும் சூழ்நிலை உருவாக வழிகோலுவீர்!

"இந்தி எதிர்ப்பு உணர்ச்சி என்ற நல்ல நோக்கத்தைத் தவறான வழிகள்மூலம் எடுத்துக்காட்டுவது, இந்தி எதிர்ப்பாளர்களுக்கு அல்ல—'கழக அரசைக் கவிழ்க்க வேண்டும்' எனப் பதைபதைத்துக் கிடக்கும் காங்கிரசுக்குத்தாள் வெற்றியைத் தேடித்தரும்!

"வன்முறைக் கிளர்ச்சி நீடிக்கும் ஒவ்வொரு விநாடியும், 'உங்களையும் அறியாமல் காங்கிரசுக்கு வெற்றியையும், உம்மால் அமைக்கப்பட்ட அரசுக்கு வீழ்ச்சியையும் தேடிக்கொடுக்கிறீர்கள்' என்றாகும்!

"மிகுதியான வேதனை உணர்ச்சியுடன் உள்ளத்தில் பட்டதனை எடுத்துரைத்தேன்—'என் பேச்சுக்கு மதிப்பளிப்பவர்களாயிற்றே' என்ற நம்பிக்கையுடன்!

"இந்தி எதிர்ப்பு எம்முறையில் அமையவேண்டும் என்பது பற்றி உம்முடனும் பெரியவர்கள் பலருடனும் கலந்து பேசித் திட்டம் வகுத்திட விரும்புகிறேன். உலகத் தமிழ் மாநாடு நடைபெற்று முடிந்ததும், இதற்கான ஒரு தனி மாநாடு கூட்டிட விழைகின்றேன்; பல பெரியோர்களின் யோசனைகளையும் பெற்று, 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி எம்முறையில் அமைய வேண்டும்' என்று தீர்மானிக்க விரும்புகிறேன்; அருள்கூர்ந்து அதற்கான சூழ்நிலை உருவாகத்தக்க முறையில் நடந்துகொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

"வேண்டாம் வன்முறை--வேண்டாம் வன்முறை! அறவழி மறவாதீர்--அமளிவழி தேடாதீர்!"

**இவ்வாறு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், அண்மையில் எழுந்துள்ள மொழிக் கிளர்ச்சி குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெள்ளத்தெளிவுற விளக்கி--கழக அரசுக்கு எதிரான சமூக விரோதச் சக்திகளின் முயற்சிகளைச் சுட்டிக்காண்பித்து--மாணவர்களின் கடமையை நினைவுறுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்; அக்கனிவு மிக்க உரையில் அவர் மேலும் விளக்கியிருப்பதாவது:—**

### ஏற்ற கொடுமைகள் ஏராளம்!

மாணவர்களே! நண்பர்களே!

உங்களுக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள உறவு இதயபூர்வமானது; இன்று—நேற்று ஏற்பட்டதல்ல—பல ஆண்டுகளுக்கு முன்பு அரும்பி மலர்ந்துள்ள தோழமையாகும்.

உமது தோழமையை நான், 'மிகப் பெரிய வலிவு' என்றும், 'தி மு கழகத்துக்கே புதிய பொலிவு தருவது' என்றும் உளமார நம்புகிறேன்.

உமது பேராதரவு, கழகம் மேற்கொள்ளும் செயல்களைச் செம்மைப்படுத்தி இன்று அதனை ஆளுங்கட்சியாக ஆக்கிக் கொடுத்திருக்கிறது.

இந்த நிலை வருவதற்கு முன்பு, கழகம் வளரப் பலியானோர் பலர்! சொல்லொணாக் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டோம்! சோர்விலாது உழைத்தோம்! இன்று ஆளும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளோம்!

### ஏச்சுப் பேச்சு அன்று--பாராட்டு இன்று!

'தி. மு. கழகம் நடத்தும் இந்த அரசு சிறப்பானது; முறை அறிந்து--வழி தெரிந்து--அமைதி காத்து--தோழமை வளர்த்து--மக்கள் குறை அறிந்து அவற்றினைக் களைந்து--நீதி, நேர்மை வழுவாமல் நடைபெற்றுவருகிறது' என்பது குறித்துப் பல்வேறு முனைகளிலிருந்தும் பாராட்டுகள் கிடைத்திருக்கின்றன.

'இதுகளாவது--ஆளுவதாவது' என்ற ஏச்சுப் பேச்சு கிடைத்தது, நமக்கு—முன்பு; இன்று, 'இவர்கள் ஆட்சி நேர்த்தியாக இருக்கிறது' என்று பல தலைவர்கள் பாராட்டுகின்றனர்!

### பொறுமுகின்றனர்---எதிர்ப்புங் காட்டுகின்றனர்!

நாம், 'ஆட்சி நடத்தத்தக்க வலிவு பெறுவோம்' என்று அன்றைய ஆளுங்கட்சி கருதவில்லை! நாம், 'கொடுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டியவர்கள்; குட்டக்குட்டக் குனிய வேண்டியவர்கள்' என்றே அவர்கள் தீர்மானித்தனர்! நாட்டுக்கும் உலகுக்கும் அறிவித்தனர்! 'தேர்தலிலே வெற்றிபெறக் கூடாது' என்பதற்காக எல்லாவிதமான சக்தியினையும் ஒன்று திரட்டிப் போரிட்டனர்! மக்களின் நல்லெண்ணத்தை உமது பேராதரவு திரட்டித் தந்தது—வெற்றி பெற்றோம்—அரசு ஆளுகிறோம்!

அவர்களால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை! இந்த அரசு அமைதி காத்து நிற்பது கண்டு அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை! இதற்குப் பலருடைய பாராட்டுதலும் கிடைத்திருப்பது கண்டு அவர்கள் பொருமுகிறார்கள்! 'இந்த அரசு நிலையானதாகிவிடுமே'

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## கண்ணீருக்கு நிறமில்லை !

"லிண்டன். பி. ஜான்சன், ஜான்சன் சிட்டி, டெக்சாஸ், வாஷிங்டன் டி. சி" என்று மட்டும் எழுதிக் கையெழுத்திட்டு, ஆஸ்திரேலியத் தலைமையமைச்சர் ஹோல்ட் மறைவுக்குத் தனது அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார் அமெரிக்க அதிபர்.

ஆஸ்திரேலியத் தலைமையமைச்சரின் மறைவினையொட்டி துக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நேரிடையாகக் கான்பெர்ராவுக்குச் சென்ற ஜான்சன், அங்கே இருந்த அனுதாபச் செய்திப் புத்தகத்தில் கையெழுத்திடும் போது, தன்னை ஒரு தனி மனிதராக மட்டுமே விளக்கம் எழுதி அனுதாபம் தெரிவித்திருக்கிறார் !

'அமெரிக்கத் தலைவர்' என்பதற்கு, எவ்வித அடைமொழியினையும் அவர் பயன்படுத்தவில்லை !

## தவணை முறை வியாபாரத்தில் கேரள அரசு ஈடுபடும்

மோட்டார் கார்கள், குளிர் சாதனப் பெட்டிகள், ஆடம்பரப் பொருள்கள் முதலியவற்றைப் பொதுமக்களிடையே தவணை முறையில் விற்பனை செய்து, அதன்மூலம் நிதி வருவாயைப் பெருக்கும் திட்டம் ஒன்றில் கேரள அரசு கவனம் செலுத்திவருகிறது.

இத்திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசைக் கவிழ்த்தால் ஆபத்து யாருக்கு ?

"1967-ல் காங்கிரசு வீழ்ச்சி அடைந்தது சனநாயகத்துக்கு மறுமலர்ச்சி—மக்களுக்கு ஒரு புது வாழ்வு இந்தத் தேர்தலில் உருவாயிற்று !

காங்கிரசுக்காரர்கள் இன்னமும் 'எதிர்க் கட்சிக்காரர்கள் ஏமாற்றி வீழ்த்திவிட்டதாக—மக்கள் ஏமாந்து வாக்களித்துவிட்டதாக எண்ணுகிறார்களே தவிர, தங்களுடைய இருபதாண்டுக்கால ஆட்சியில் மக்களுக்கு திருப்தி ஏற்படவில்லை என்பதை உணர மறுக்கிறார்கள் !

'தமிழக அரசு என்ன தவறு செய்யும்' என்று எதிர்பார்த்து—ஏதும் தவறு செய்யாததால் ஏமாந்து—ஏதாவது கிளர்ச்சி நடத்தி, கழக அரசைக் கவிழ்க்க எண்ணுவது ஆகாத எண்ணமாகும் !

தமிழக அரசைக் கவிழ்க்க எண்ணுவது, முதலில் முடியாத காரியம் ! இரண்டாவது — அதற்கான வலிவு காங்கிரசிடம் இன்றையத்தினம் இல்லை ! மூன்றாவது—எங்களுக்கென்று தனிப் பண்பு உண்டு ! நான்காவது—நாங்கள் ஒன்றும் தவமிருந்து பெற்றது அல்ல இந்த அமைச்சர் பதவி ! ஐந்தாவது—கழக அரசைக் கவிழ்த்தால், கழகத்தின் பலம் அதிகரிக்குமே தவிர குறையாது !

நாங்கள் நல்ல பல காரியங்களைச் செய்துகொண்டு இருக்கும் பொழுது இந்த அரசைக் கவிழ்த்தால், அது அவர்களுக்குத்தான் ஆபத்து !

—அறிஞர் அண்ணா
(சேலம் சிறப்புக் கூட்டத்தில்)

## கடையநல்லூர் கழகத் தோழர்கட்கு :

"தென்காசி வட்டம் கடையநல்லூரில் தோழர் சி. நடராசன் அவர்களைச் செயலாளராகக் கொண்டு கழகக் கிளை இயங்கி வருகிறது. இந்நிலையில் வேறு யாரோ சிலரை நிர்வாகிகளாகக் கொண்டு கழகக் கிளை அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது கழகச் சட்ட திட்ட விதி 7-பிரிவு 6-க்கு முரணானது.

"ஆகவே, சட்டப்படி நடைபெற்றுவரும் திரு. சி. நடராசன் அவர்களைச் செயலாளராகக் கொண்டு இயங்கிவரும் கிளையில் மட்டுமே தொடர்பு கொள்ளுமாறு நகரக் கிளை உறுப்பினர்களையும், தோழர்களையும் கேட்டுக்கொள்கிறேன்"

என, தென்காசி வட்டச் செயலாளர் அ. இராமநாதன் அறிவிக்கிறார்.




ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

# நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்றாட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது, நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள், அது சகஜம். அந்த டின்னோ அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா ? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப்பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்றாட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனால் விளங்கும். மேலும் அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் ஜாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவை யெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர். இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்றாட உபயோகப்பொருட்களுக்கு தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளிக்கின்றனர். பொருட்களை விஞ்ஞான ரீதியில் சோதித்து, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளைச் சிபாரிசு செய்வது மெட்டல் பாக்ஸ் கம்பெனியர் அளிக்கும் வசதிகளில் ஒன்று. 'பாக்' செய்வதில் வெளிநாட்டு தொழில் அறிவும் துணை புரிகிறது.

அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால் மற்ற வசதிகளுடன் சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது.

MB
மெட்டல் பாக்ஸ்
பாதுகாப்பான பாக்கிங்

JWTMB 4102

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாமலும் அரசியலில் பெருமையுடன் வாழ்ந்து காட்ட முடியும்' என்பதற்குக காமராசருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது; இதில் அவர் வெற்றி பெறுவாரா அல்லது சந்தர்ப்பம் வெற்றி பெறுமா என்பதை இனி வரும் நாட்கள் உணர்த்த வேண்டும்."

"அப்படியென்ருல், அவரை 'தேர்தலுக்கே நிற்கக் கூடாது' என்று சொல்லுகிருய் போலிருக்கிறதே!"

"பட்டம்—பதவிகள் இல்லாமல் தனக்கு உண்மையாகவும் தகுதி—திறமை இருக்கிறது என்பதை, அவர் வேறெப்படி மெய்ப்பிக்க முடியும்?"

"நல்ல அரசியலப்பா இது!"

"'அரசியல்' என்று தனியாக ஏதும் இல்லை; மனிதர்களாக அவ்வப்போது உருவாக்குவதுதான் அரசியல்!"

—எஸ்.ஆர்.




நல்ல குணமாக இல்லாவிட்டால், ஒரு குணம் இருப்பதே கஷ்டமாக இருக்கிறது!

ஒன்றுக்கொன்று மாறுபட்ட மூன்று குணங்களைக் காட்டியிருக்கிருர் — மத்திய கல்வி அமைச்சர் திரிகுணசென்!

'துன்பத்தில் பங்கு கொள்ளுவதுதான் உண்மையான நட்பு' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். மத்திய கல்வி அமைச்சர்கூட இந்தத் தத்துவத்தைத்தான் மொழித் துறையில் திருப்பிப் போட்டு, உபதேசம் செய்திருக்கிருர் போலிருக்கிறது!

"மொழிச் சுமை, எல்லோருக்கும்தான் சமமாக இருக்கட்டுமே" என்று யோசனை தெரிவித்திருக்கிருர் — பெங்களூர் மாணவர் கூட்டத்தில்!

"இந்தி பேசாத பகுதியில் பாதிக்கப்படுபவர்களுக்கு மார்க்கம் என்ன?" என்று கேட்டால் 'இந்தி பேசுபவர்களும் ஆங்கிலம் படித்துவிட்டு, அதனுல் உண்டாகும் அதிகப்படிச் சுமையை அனுபவித்துவிடட்டுப் போகட்டுமே' என்று கூறியிருக்கிருர்!

"நாங்கள் ஆங்கிலம் படிக்க மாட்டோம்" என்று அவர்கள் பிடிவாதம் பிடித்தனுல் வந்த வினைதான் மொழிச் சட்டத்தில் 'கலப்படம்' செய்யப்பட்டது! இதை ஏன் இந்த மத்திய அமைச்சர் உணரவில்லை எனத் தெரியவில்லை!

"மொழிச் சுமை, எல்லோருக்கும் பரவலாக்கப்பட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என, மக்கள் போராடுவதில் பொருள் இருக்கிறது; தனிப்பட்ட வகையில் இதனை நான் ஆதரிக்கிறேன்" என்கிருர் அவர்!

சுமையைப் பங்கு போட்டுக் கொள்ளக்கூட அல்ல; ஒருவருக்குமே சுமை இல்லாமல் இருப்பதற்காகத்தான், கலப்படமில்லாத ஆட்சி மொழிச் சட்டத்தை — அரசியல் சட்டத் திருத்தமாக்கும்படிக் கேட்கிருர்கள்; இதுவும் அவருக்குப் புரிந்திருப்பதாகத் தெரியவில்லை! கல்விக்கே அமைச்சரல்லவா! அவ்வளவு தெளிவு!

இத்துடன் விட்டாரா என்ருல் இல்லை; திரிகுண சென் அல்லவா! எனவே, மூன்ருவதாக ஓர் எண்ணம்; அதாவது, 'தாய்மொழி—ஆங்கிலம் என்ற இரண்டு மட்டும் போதும்—இந்தியா முழுமைக்கும்' என்கிருர்!

ஆனுல் அமைச்சர் பதவி குத்திக்காட்டுகிறது!—"அரசியல் காரணத்துக்காகத்தான், அரசியல் சட்டத்திலேயே 'இந்தி ஆட்சி மொழி' என்று வழி வகுத்தாகிவிட்டது" எனக் கூறியிருக்கிருர்!

இதைத்தான் எப்போதே சொல்லியிருக்கிருர் — இப்பொழுது தமிழகத்தின் முதலமைச்சராகியிருக்கும் தி. மு. கழகத் தலைவர்—'இந்தி வருவது ஒரு மொழிப் பிரச்சினை மட்டுமல்ல; அரசியல் பிரச்சினையும்கூட' என்று!

## சென்னைச் சீரணியினருக்கு

### தனி அதிகாரி வேண்டுகோள்

"உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி மாபெரும் ஊர்வலம் ஒன்று 3-1-68 மாலை 2 மணிக்கு தீவுத் திடலிலிருந்து (ஐலண்டு மைதானம்) புறப்பட இருப்பது தெரிந்ததே. அந்த ஊர்வலத்தில் சீரணித் தொண்டர்கள் சீருடையுடன் வரவேண்டுமென்று ஏற்கனவே தொண்டர்களுக்கு அறிக்கை மூலமும், தொகுதித் தலைவர்கள் மூலமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"சீருடை தயாரித்துள்ள சீரணித் தொண்டர்களுக்குப் புதிதாக பிளாஸ்டிக்கில் செய்த இலச்சினை (பேட்ஜ்) வழங்கப்படும்; அதனுல் சீரணித் தொண்டர்கள், 31-12-67 மாலை 3 மணிக்கு தீவுத் திடலுக்கு தவருது வருகைதர வேண்டுகிறேன். சீருடையுடன் வரும் தொண்டர்களுக்குத்தான் இலச்சினை வழங்க இயலுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் தீவுத் திடலில் கலை நிகழ்ச்சிகள் ஏழு நாட்களும் நடைபெற இருப்பது தெரிந்ததே; கலை நிகழ்ச்சிகள் செவ்வனே நடைபெறவும், திரளாக வரும் பெரு மக்களுக்கு வசதி செய்து தரவும் வேண்டி, ஏற்கனவே தொகுதிச் சீரணித் தலைவர்களிடம் வட்டத்திற்கு மூன்று தொண்டர்கள் வீதம் தேர்ந்தெடுத்து அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தொகுதித் தலைவர்களால் வட்டத்திற்கு மூன்று பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட சீரணித் தொண்டர்களும் ஏழு நாட்களும் தங்களின் உழைப்பினைத் தருவதற்கு வாய்ப்பும் வசதியும் உள்ள சீரணித் தொண்டர்களும், 27—12—67-க்குள் தீவுத் திடலிலுள்ள மாநாட்டு அலுவலகத்திற்கு வந்து தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்."

க. பரமசாமி
சீரணித் தனி அதிகாரி

## காங்கிரசு ஏட்டுக்கு நோட்டீசு!

"திருச்செந்தூர் கோவில் தர்மகர்த்தாவும் ஊராட்சி உறுப்பினருமான ஆ. நல்லகண்ணுவைப் பற்றி காங்கிரசு ஏடான 'நவசக்தி' டிச. 13, 14-ந் தேதி இதழ்களில் பொய்யான செய்தி வெளியிட்டதற்காக ரூ. 20,000 மான நஷ்டம் கேட்டு அதன் ஆசிரியருக்கும்" கௌரவ ஆசிரியருக்கும் நோட்டீசு அனுப்பப்பட்டுள்ளன" என, வட்டச் செயலாளர் பொ. கண்ணபிரான் அறிவிக்கிருர்.

## கலை நிகழ்ச்சி

திங்களூர் எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் 28—12—67 மாலை 7 மணிக்கு தண்ணீர்த் தொட்டித் திடலில்; திரு. பழனிச்சாமி தலைமையில், முருகு பாண்டியனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

மாணவர்களுக்கு அண்ணு கனிவுரை] [2-ம் பக்கத்தின் தொடர்ச்சி

# பாடுபட்டு அமைத்த அரசு பாழ்பட உமது செயலே காரணமாக அமைய வேண்டுமா?

என்பதனை எண்ணிப் பதறிப் போயுள்ளனர்! எனவே அவர்கள், நாம் அரசு ஆளத் தொடங்கிய நாள்தொட்டு, நமது அரசுக்கு எதிர்ப்புக் காட்ட முனைந்து நிற்கின்றனர்.

### பதறுகின்ற நிலைமை எங்களுக்கு உண்டா?

என்னை நீங்கள் மிக நன்ருக அறிவீர்கள்! பதவியில் என்னை இழுத்துப் பிடித்து உட்கார வைத்திருக்கிருர்களே ஒழிய, 'அதிலே இருந்தே தீர வேண்டும்' என்ற விருப்பம் துளியும் அற்றவன் நான்! எந்த முயற்சியிலாவது அவர்கள் வெற்றிபெற்று—பதவி போகும் நிலையை உண்டாக்கிவிடுவார்களானுல், 'ஐயோ' என்று பதறும் மனநிலை எனக்குக் கிடையாது என்பதனை அறிவீர்கள்! பதவிமூலம் நானே, என் நண்பர்களோ, 'பலன் -- சுவை -- 'உயர்நிலை பெற வேண்டும்' என்ற துடிப்போ அரிப்போ கொண்டில்லை—அறிவீர்கள்!

### பொய்யான உணர்வை முறியடித்துக்காட்டினேம்

இந்த அரசு பொறுப்பை ஏற்றதன்மூலம், 'காங்கிரசு கட்டிவைத்த சர்வாதிகாரத்தை உடைத்தெறிந்தோம்' என்ற உண்மையை உலகுக்கு அறிவித்திருக்கிரேம்! 'காங்கிரசுக் கட்சியினுல் மட்டும்தான் நிலையான அரசு நடத்த முடியும்; பிற கட்சிகளால் முடியாது' என்ற பொய் உணர்வை முறியடித்துக் காட்டியுள்ளோம்.

### கழக அரசைக் கலைக்கக் காரணமா தேவை?

வேறு பல காங்கிரசு அல்லாத அரசுகளில், உட்குழப்பம் மூட்டிக் கவிழ்த்திட முடிந்தது; இங்கு அதற்கு இடமில்லை என்பதனை அவர்கள் அறிந்துள்ளனர்; எனவே, அவர்களிடம் உள்ள ஒரே ஒரு வழி, நமது அரசு, 'அமைதி காத்திட—சமூகத்தில் வன்முறை எழாது தடுத்திட இயலவில்லை' என்ற நிலையை மூட்டிவிட்டு, மத்திய அரசினைக் கொண்டு நமது அரசைக் கலைப்பது ஒன்றுதான்! இந்திய அரசியல் சட்டத்தின்படி இதற்குத் தேவையான அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது!

"ஊரிலே அமைதி கெடவும், உடைமைகள் அழிக்கப்படவும் இந்த அரசு காரணமாக இருக்கிறது; இந்த அரசினுல் வன்முறையைத் தடுத்திட இயலவில்லை; எனவே, இது அரசாள இலாயக்கில்லை" என்ற காரணம் காட்டி, மத்திய அரசு, நமது அரசைக் கலைத்துவிட முடியும்!

இந்த நோக்கம் கொண்டே, கடந்த பல மாதங்களாகவே, பெருந் தலைவர் காமராசரிலிருந்து, 'தி. மு. கழக ஆட்சியில் சட்டம் கெட்டுவிட்டது; ஒழுங்கு குலைந்துவிட்டது; அமைதி கெட்டுவிட்டது; அமளி அதிகரித்துவிட்டது' என்று பேசிக்கொண்டுவருகிருர்கள்!

### அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தவா முனைகிறீர்?

இந்த நிலையில், எம்மை அரசாளும் நிலையை ஏற்கச் செய்துவிட்ட நண்பர்களே! விரும்பியோ, தெரிந்தோ அல்ல—இது குறித்து எண்ணிப் பார்த்திடாமல், அவர்கள் விரும்புகிற சூழ்நிலை உருவாக இடங்கொடுத்துவிட்டிருக்கிறீர்கள்!

'இரயில் பெட்டிகள் கொளுத்தப்பட்டன—சொத்துச் சேதம் ஏற்பட்டிருக்கிறது'—என்ற நிலைமையைக் கண்டு, 'இந்தி எதிர்ப்பு உணர்ச்சி கொழுந்துவிட்டு எரிகிறது' என்பதாக மத்திய அரசு கருதிக்கொள்ளும் என்று எண்ணுகிறீர்கள்; ஆனுல், 'மத்திய அரசினர் பெட்டிகள் கொளுத்தப்படுகின்றன; அதனைத் தடுத்திட இயலவில்லை -- இந்த அரசினுல்; ஆகவே, இது ஆளத் தகுதியற்றது' என்றுதான் எண்ணுகிருர்கள்!

அதன் தொடர்பாக, 'இந்த அரசு கலைக்கப்பட்டாக வேண்டிய அரசு' என்ற முடிவுக்கு மத்திய அரசு வந்திடின் நான் வியப்படைந்திடக் காரணமில்லை!

### இந்த நிலைமையினை காணவா விரும்புகிறீர்கள்?

இந்த நிலையைக் காணவா அரசாளும் நிலையை எமக்கு ஏற்படுத்திக் கொடுத்தீர்கள்? 'இந்தக் கழகம் ஆட்சி நடத்தும் நிலையைப் பிடித்திட முடியாது; கிட்டிடினும், அதிகக் காலம் நிலைக்காது' என்று அவர்கள் கூறினர்; 'ஆமாம்' என்று உலகு கூறும்படியான முறையிலா நடந்துகொள்ள விரும்புகிறீர்கள்?

துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு பதவியிலிருந்து வெளியேற நான் தயங்கப் போவதில்லை; ஆனுல் அதற்குப் பிறகு..........? பாடுபட்டு அமைத்த அரசு பாழ்பட உமது செயலே காரணமாக அமைய வேண்டுமா?

இந்த அரசு இந்தி எதிர்ப்பு உணர்ச்சியின் விளைவு -வடிவம்—மூலதளம்! இந்த அரசு கவிழ்க்கப்படுவதாலே, 'எது பலப்படும்—எவர் அரசாள வருவர்—என்ன நிலை வளரும்' என்பதனை எண்ணிப் பார்த்திட வேண்டாமா?

### உணர்ச்சியின் வடிவத்தையே சீர்குலைப்பதா?

இந்தி எதிர்ப்பு உணர்ச்சிக்கு நான் மதிப்பளிப்பவன்; ஏனெனில், நானே அந்த உணர்ச்சி கொண்டவன்; ஆனுல் உணர்ச்சியை எடுத்துக்காட்டும் முறை எப்படி இருந்திட வேண்டும்?—எந்த அரசு அந்த உணர்ச்சியின் வடிவமோ, அந்த அரசையே குலைத்திடத்தக்கவிதமாகவா?

இராஜாஜி, 'இந்தி எதிர்ப்பு உணர்ச்சியும், கிளர்ச்சியும் தேவை'—என்கிருர்; ஆனுல், 'இந்தி ஆதரவாளர் செய்திட்ட அதே வன்முறையினதாக நமது கிளர்ச்சி இருத்தல் கூடாது; வன்முறை தேவையில்லை; அது, தீது' என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

'மொழிக் கிளர்ச்சியிலே வெற்றி பெறவேண்டும்' என்ற ஆர்வத்தை வரவேற்கிறேன்; துணை நிற்கிறேன்; ஆனுல் அது அமைதியான முறையில் இருந்திட வேண்டும்! கொதித்துக் கொப்பளித்து, வன்முறையாக வடிவம் கொள்வதன் மூலமாக அல்ல!"

## இந்தநிலையினைத்தான் நீவிர் விரும்புகிறீர்களா?

"மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாம், 'சில நாட்களில் அல்லது சில மாதங்களில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வெற்றி பெற்றுவிட முடியும்' என்ற அவசரம் நமக்குத் துணை செய்யாது! தொடர்ந்து -- துவளாமல் நமது எதிர்ப்பு உணர்ச்சி இயங்கவேண்டும்; வன்முறை புகுந்துவிட்டால் இது இயலாததாகிவிடும்!

"ஈராண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கிளர்ச்சியின்போது, எந்தெந்தச் சமூக விரோதச் சக்திகள் நுழைந்து நாசவேலைகளைச் செய்து மாணவ சமுதாயத்தின்மீது பழியைப் போட்டதோ, அதே சக்திகள், இன்று அதே வேலையில் ஈடுபட்டிருக்கக் காண்கின்றேன்!

"அந்தச் சக்திகள் வெற்றிபெற இடம் தந்துவிடுவோமானுல், இந்தி எதிர்ப்பும் வெற்றி பெருது -- பண்பாடும் நிலைக்காது -- கழக அரசும் நிலைக்காது! இதனை உணருவீர்களாயின், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை, 'இப்போது நடத்தும் முறையில் நடத்துவது கூடாது' என்ற முடிவுக்கு வருவீர்கள்!

"இரயில் பெட்டிகளுக்கு நெருப்பு வைத்திடுவது, 'இந்தி ஆதிக்கத்துக்கு வைத்த நெருப்பு' என்று கருதிக்கொள்ளாதீர்கள்! அது, நீங்கள் உருவாக்கிய தி. மு. கழக அரசு அழிந்திட வைத்திடும் நெருப்பு — என் நெஞ்சுக்கு இடும் நெருப்பு! இதனைத்தான் நீவிர் விரும்புகிறீர்களா?"

## பொதுக்கூட்டம்

**28--12--67**

குன்னத்தூர்

தி.மு.க. சார்பில் சங்கரி இடைத்தேர்தல் வெற்றி விழா; மாலை 6 மணிக்கு சந்தைத் திடலில்; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, மு. கண்ணப்பன் எம்.எல்.ஏ., மு. சின்னசாமி எம்.எல்.ஏ., கே. எஸ். ஆனந்தன் பி.காம்., பி.எல்., கு. க. சுப்பிரமணியம், கே. என். நடராசன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, ஆரியநாராயண செட்டித் தெரு, சென்னை-18) [illegible]